சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் சமத்துவப் பொங்கல் -

# போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



தமிழினத்தின் பெருமையை கொண்டாடும் திருநாள் தமிழர் திருநாள்! தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் இவைகளை பிரதிபலிக்கும் பொன்னாள் பொங்கல் திருநாள்! தைத் திங்கள் முதல்நாளே தமிழ் புத்தாண்டு என முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த நாள்!

உழுத மண்ணினை, கால்நடைகளை வணங்கி நன்றி கூறும் உன்னத உழவர் பெருநாளே பொங்கல் திருநாள்! தமிழர்களின் வீரம், கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பண்பாட்டு திருநாள்!

பொங்கல் விழாவைத் தமிழர் திருநாளாக அடையாளப்படுத்தியதில் திராவிட இயக்கத்திற்கு பெரும் பங்கு உண்டு. தந்தை பெரியாரும், பேரறிஞரும், முத்தமிழறிஞர் கலைஞரும் பொங்கல் திருநாளே தமிழர்கள் அனைவருக்குமான விழா என்பதை எழுத்துக்களாலும், பேச்சுக்களாலும், நிகழ்ச்சிகளாலும் மக்கள் மனதில் என்றும் நீங்காமல் நிலைபெறச் செய்தனர்.

பொங்கல் திருநாள் என்றாலே இனிப்புஇனிமை. அதிலும் நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "திராவிட மாடல் ஆட்சி" அமைந்த பிறகு மக்களின் இதயத்திலே இரட்டிப்பு இனிப்பும் - இனிமையும் கலந்த இந்த நன்நாளில் சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் மாநகர வட்டக் கழகங்கள், ஒன்றிய ஊராட்சி கிளைக் கழகங்கள், பேரூர் வார்டு கழகங்கள் தோறும் இருவண்ண தோரணங்கள் கட்டி, மஞ்சள் - கரும்பு வைத்து சமத்துவப் பொங்கலிட்டு, கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலில் கழக கொடியை ஏற்றிவைத்து, "இளம் தலைவர் துணை முதல்வர்" பிறந்தநாள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி எழுச்சிமயமாக கொண்டாடிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

| ஓமலூர் மற்றும் சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி | |
|---|---|
| கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை: இரா.இராஜேந்திரன் சுற்றுலாத்துறை அமைச்சர் , தூத்துக்குடி சரத்பாலா தலைமைக்கழக பேச்சாளர் | |
| நாள் : 14. 01. 2025 செவ்வாய்க்கிழமை | |
| **ஒன்றியம் / பகுதி / பேரூர்** | **நேரம்** |
| **தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம்** | **காலை 09.00 முதல் மாலை 05.00 மணி வரை** |
| நாள் : 15. 01. 2025 புதன்கிழமை | |
| கன்னங்குறிச்சி பேரூர் | காலை 08.00 மணி |
| அஸ்தம்பட்டி பகுதி | காலை 08.30 முதல் 10.00 மணி வரை |
| குமாரசாமிபட்டி பகுதி | காலை 10.30 முதல் நண்பகல் 12.00 மணி வரை |
| செவ்வாய்பேட்டை பகுதி | நண்பகல் 12.30 முதல் பகல் 02.00 மணி வரை |
| அரிசிபாளையம் பகுதி | மாலை 04.30 முதல் 06.00 மணி வரை |
| பொன்னம்மாபேட்டை பகுதி | மாலை 06.30 முதல் இரவு 08.00 மணி வரை |
| கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை: இரா.இராஜேந்திரன் சுற்றுலாத்துறை அமைச்சர் , தூத்துக்குடி சரத்பாலா தலைமைக் கழக பேச்சாளர் , மு.கார்த்திகேயன் மாவட்ட கழக பொருளாளர் , | |
| நாள் : 15. 01. 2025 புதன்கிழமை | |
| ஓமலூர் தெற்கு ஒன்றியம் | காலை 09.00 முதல் மாலை 05.30 மணி வரை |
| சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி | |
| கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை: பார் இளங்கோவன் , | |
| நாள் : 11. 01. 2025 சனிக்கிழமை | |
| கொண்டலாம்பட்டி பகுதி | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| குகை பகுதி | மாலை 04.00 மணி முதல் 05.30 மணி வரை |
| தாதகாப்பட்டி பகுதி | மாலை 06.00 மணி முதல் இவு 08.00 மணி வரை |
| நாள் : 12. 01. 2025 ஞாயிற்றுக்கிழமை | |
| கிச்சிப்பாளையம் பகுதி | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| அம்மாபேட்டை பகுதி | மாலை 04.00 மணி இவு 07.00 மணி வரை |
| சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி | |
| கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை : பெத்தாம்பாளையம் சா.ராஜசேகரன் | |
| நாள் : 11. 01. 2025 சனிக்கிழமை | |
| மெய்யனூர் பகுதி | காலை 10.00 முதல் பகல் 12.00 மணி வரை |
| சூரமங்கலம் பகுதி | மாலை 04.00 மணி 05.30 மணி வரை |
| அழகாபுரம் பகுதி | மாலை 06.00 மணி இவு 07.30 மணி வரை |
| நாள் : 12. 01. 2025 ஞாயிற்றுக்கிழமை | |
| சேலம் வடக்கு ஒன்றியம் | காலை 10.00 முதல் பகல் 12.00 மணி வரை |
| ஓமலூர் சட்டமன்றத் தொகுதி | |
| கழக கொடி ஏற்றி, பரிசு வழங்கி சிறப்புரை : .இ.ஜி.சுகவனம் , | |
| நாள் : 11. 01. 2025 சனிக்கிழமை | |
| காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் | பகல் 02.00 முதல் மாலை 04.00 மணி வரை |
| நாள் : 12. 01. 2025 ஞாயிற்றுக்கிழமை | |
| ஓமலூர் வடக்கு ஒன்றியம் | காலை 10.00 முதல் பகல் 12.30 மணி வரை |
| ஓமலூர் கிழக்கு ஒன்றியம் | பகல் 02.00 முதல் மாலை 04.00 மணி வரை |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர்
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

ஆளுநருக்கு அதிகாரம் என்ற பெயரில்

# தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை சீர்குலைக்க பா.ஜ.க. முயற்சி!

## அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் தலைவர் சா.அருணன் கண்டனம்!



சென்னை, ஜன. 11-

ஆளுநருக்கு அதிகாரம் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை கண்டு அஞ்சி சீர்குலைக்க நினைக்கும் ஒன்றிய அரசை கண்டிக்கிறது எனவும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன் எனவும் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பதின் மறு பெயர் தி.மு.க. ஒரு காலத்தில் வடக்கு வளர்கிறது தெற்கு தேய்கிறது என்ற அளவில் தென் மாநிலங்கள் இருந்தது. நிலைமை தலைக்கீழாக மாறி தெற்கு வளர்கிறது வடக்கு தேய்கிறது இன்றைய நிலை. அதற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் அதாவது 1989 ஆம் ஆண்டு ஆட்சி ஏற்ற பிறகு தமிழ் நாட்டின் வளரச்சி என்பது பல மடங்கு ஏற்றத்தை கண்டது. எப்போதெல்லாம் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதில் மற்ற மாநிலங்களை பின்னுக்குத்தள்ளி முன்னேற்றம் அடைய பாடுபடும் உதாரணத்திற்கு திருவள்ளுவர் பெயரில் பல்கலைக்கழகம், பாரதி தாசன் பெயரில் பல்கலைக்கழகம், காமராசர் பெயரில் பல்கலைக்கழகம் தந்தை பெரியார் பெயரில் பல்கலைக்கழகம், என அமைத்து பல்வேறு அரசு கலை அறிவியல் கல்லூரிகள் நிறுவியவர் தான முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஐஐடிக்கு நிகராக அண்ணா பல்கலைக் கழகம் அமைத்து கீழ் பொறியியல் கல்லூரிகள், பல்பகலைக் கழகங்களை உருவாக்கி ஏழை எளிய நடுத்தர மக்களின் பிள்ளைகள் மேற்படிப்பு பயின்று இந்திய அளவிலும் உலக அளவிலும் பெரிய அறிஞர்களாகவும், அறிவியல் விஞ்சானிகளாகவும் மேம்பாடு அடைய வித்திட்டவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அவர் இல்லை என்றால் தமிழ்நாடு நிலைமை கேள்விக் குறியாக்கப்பட்டு இருக்கும், தி.மு.க. ஒன்றிய அரசில் இடம்பெறும் போதெல்லாம் தமிழ்நாட்டின் முன்னேற்றம் அடையும் விதமாக துறைகளை பெற்று வளர்ச்சிக்கு வித்திட்டவர் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அதாவது கலைஞர் அவர்களின் மூளையாகச் செயல்பட்ட முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்கள் தமிழ் நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் சென்றார் என்றால் அது மிகையாகாது அந்த விதத்தில் எண்ணற்ற தொழிற்சாலைகளை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்து இந்தியாவை திரும்பிப் பார்க்க வைத்தார். உதாரணத்திற்கு திருபெரும்புதூர் ஹூண்டாய் நிறுவனம், சென் கோபியன் கண்ணாடி தொழிற்சாலை, சாம்சங், நோக்கியா மொபைல் தொழிற்சாலைகள், என அடிக்கிக் கொண்டே போகலாம். தி.மு.க. ஆட்சியில் தான் கிண்டி உள்ளிட்ட பல நகரங்களில் டைடல் பூங்காக்களைத் தொடங்கி வெளி நாட்டிற்கு நிகராக லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத் தந்தார். அதோடு அல்லாமல் ஒன்றிய அரசில் இடம்பெறும் டி.ஆர்.பாலு அவர்களை ஒன்றிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக்கி கத்திப்பாரா மேம்பாலம், பாடி வெளிவட்ட மேம்பாலம் என சென்னை மற்றும் தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள அனைத்து மேம்பாலங்களும் தி.மு.க. ஆட்சியிலும் மற்றும் ஒன்றியத்தில் ஆட்சியில் பங்குவகித்த போது தான் என்பதை அனைவரும் அறிவார்கள். அதேபோன்று ஒன்றிய அரசில் தகவல் தொழிற்நுட்பத் துறை பெற்று தயாநிதி மாறன் அவர்களை அமைச்சராக்கி தகவல் தொழில் நுட்ப மையங்களை ஏற்படுத்தி பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை பெற காரணமாக இருந்தார். அதேபோன்று ஆ. ராசா அவர்ரகளையும் ஒன்றிய அமைச்சரவையில் தகவல் தொழில்நுட்பத் துறையை பெற்றுக் கொடுத்து தொலைத் தொடர்புத்துறையில் இன்று புரட்சி ஏற்பட்டியிருக்கிறது என்றால் இவரே காரணம் இப்படி அடிக்கிக் கொண்டே போகலாம்.

இத்தனைக்கும் காரணம் யார் இமாலய வளர்ச்சி தமிழ்நாடு பெற்றிருப்பது எதனால் என்பதை பொருத்துக் கொள்ளமுடியாத சகித்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் தி.மு.க. அரசு தானே, இவர்களில் திராவிட மாடல் ஆட்சி தானே, தமிழ் நாட்டின் வளர்ச்சியை ஒடுக்க வேண்டும் என்றால் கல்வியில் கை வைக்கவேண்டும் என்று எண்ணி புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்கிறது. அப்படி இல்லை என்றால் நிதியை தரமறுக்கிறது. இதனால் 2500 கோடி ரூபாயை இன்னும் விடிவிக்காமல் வஞ்சிக்கிறது. கல்வியை மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி வருகிறார் ஆனால் செவிக்கொடுக்க மறுத்து வருகிறது ஒன்றிய அரசு. எப்படி ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே ரேசன் கடை, என்று கங்கணம் கட்டி செயல் படுத்த நினைக்கின்றார்களோ அதே போன்று தான் நாடு முழுவதும் ஒரே மொழி என்று கொண்டுவர துடித்து தான் பல்கலைக்கழக துணை வேந்தர் நியம னத்தில் மாற்றத்தை கொண்டு வந்து ஆளுநருக்கு முழு அதிகாரத்தை கொடுத்துள்ளது யு.ஜி.சி அமைப்பு. அதாவது மாநில அரசிற்கு துணை வேந்தர்களை அமைக்கும் அதிகாரம் இல்லை. உத்தரவு ஆளுநரே நியமித்துக் கொள்ளும் என்ற விதியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற உத்தரவு யாரை வேண்டுமானாலும் நியமித்துக் கொள்ளமுடியும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்கு அதிகாரம் இல்லையாம் ஒன்றிய அரசால் நியமித்த ஆளுநருக்கு முழு அதிகாரம் இது அரசியல் அமைப்பு சட்டத்திற்கும் அரசியல் அமைப்பு மாண்பிற்கும் எதிரானது. இதனை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்.

சட்டப்பேரவையில் ஆளுநருக்கு துணை வேந்தர் நியமனத்தில் முழு அதிகாரம் உத்தரவு ரத்து செய்ய தனித் தீர்மானம் கொண்டு வந்த இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

மேலும் துணை வேந்தர் நியமனம் ஆளுநருக்கு முழு அதிகாரம் வழங்கி உத்தரவிட்ட ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாக கண்டிக்கின்றேன்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.






புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிளைக் கழக நிர்வாகிகளுக்கு தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி. ஜி. இராஜேந்திரன் பொங்கல் தொகுப்புகளான வேட்டி, சட்டை, புடவை, நாட்காட்டி பரிசுத்தொகை உடன் கூடிய பொங்கல் பரிசு பையினை வழங்கி அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகள் தெரிவித்தார். உடன் மாவட்டக் கழக அவை தலைவர் க.திராவிட பக்தன் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர் .டி. இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர் கே அரிகிருஷ்ணன் , மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர்கள் என் நந்தகோபால்,வி. எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் வி. ராஜசேகர் செங்குட்டுவன் சி ஆர் குமரன் குப்பூர் டி திலீப் குமார் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே.ஏ.மதியழகன், ஏ.எஸ்.மணி, கே.பி. தமிழ்ச்செல்வன், ஆர்.வாசு, கோபிநாத், பெருமாள், ஆர்.சேகர், பிரகாஷ் ஞான ஒளி, இளைஞரணி நிர்வாகிகள் ஆர்.மோகனசுந்தரம், எம். கார்த்திக், தினேஷ், சி. ஆர் .மணிகண்டன், அன்பழகன் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிறுவேடல் வெ.கணேசன்

### சனவரி 11 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவேடல் கிளைக் கழகச் செயலாளர் – வாலாஜாபாத் ஒன்றிய இணைச் செயலாளர் – ஒன்றிய துணைச் செயலாளர் – மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜாபாத் ஒன்றியக்குழு உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வாலாஜாபாத் நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ‘சிறை சென்ற செம்மல்’ என்று அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

சேப்பாக்கம் பகுதி 62வது வட்ட

# முன்னாள் செயலாளர் க.எல்லப்பன் மறைவு!

## எஸ்.மதன்மோகன் - முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, டிச.11

சேப்பாக்கம் பகுதி முன்னாள் அவைத் தலைவரும், 62வது வட்ட முன்னாள் செயலாளரும், முன்னாள் மாமன்ற உறுப்பினருமான க.எல்லப்பன் அவர்கள் (வயது 84) வயது மூப்பின் காரணமாக நேற்று (10.1.2025-வெள்ளிக்கிழமை) இரவு 9.30 மணியளவில் இயற்கை யெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் பகுதிக் கழகச் செயலாளரும் - மண்டலக் குழுத் தலைவருமான எஸ்.மதன் மோகன் உள்ளிட்ட கழக முன்னணியினர், தோழர்கள் மறைந்த க.எல்லப்பன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (11.1.2025) மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் (படவேட்டம்மன் கோயில் தெரு, சிந்தாதிரிப்பேட்டை) இருந்து புறப்பட்டு கிருஷ்ணாம்பேட்டை இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரூர் கே.ஆர்.சுப்பிரமணி

### சனவரி 11 (2020)



1968ஆம் ஆண்டு பள்ளிப் பருவத்திலேயே, இந்தித் திணிப்பை எதிர்த்து மொரப்பூர் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் அரூர் நகரில் ‘இளைஞர் தி.மு.க.’ அமைப்பை தொடங்கி மாவட்டம் முழுவதும் கழகக் கொள்கை பரப்ப துவங்கிய இவர், அரூர் ஒன்றிய துணை துணைச் செயலாளர், பேரூர்ச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட மாணவர் அணி மற்றும் தொண்டர் அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கறுப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் அரசாணை எரிப்புப் போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம், கலைஞர் கைது எதிர்ப்பு மற்றும் ராணிமேரி கல்லூரி பிரச்சினையில் கழகத் தலைவர் கைது எதிர்ப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**